# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 135/2014**

பெயர்: **தங்கவேல்** நாள்: 02.02.2024

வா.சா.1 – 2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – தங்கவேல் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 03.08</u>

வா.சா.ஆ.59 மற்றும் வா.சா.ஆ.60 ஆவணங்களைப் பொறுத்தவரையில் வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால், இல்லை. வழக்குரையில் குறிப்பிடாத சங்கதிகள் குறித்து எழுத்துமூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ சாட்சியம் அளிக்க எனக்கு சட்டப்படியான எந்த உரிமையும் இல்லையென்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.59 மற்றும் வா.சா.ஆ.60 ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால், சரியல்ல. எனது சாட்சியத்திற்கு பின்னிட்டு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களும் பிரதிவாதிகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 95/5 சம்பந்தமாக சேலம் மாவட்ட வருவாய் அலுவலர், சங்ககிரி வருவாய் கோட்டாட்சியர் மற்றும் சங்ககிரி வட்டாட்சியர் ஆகியோர்கள் முன்னிலையில் நடைபெற்ற நடவடிக்கைகளில் சங்ககிரி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் இருப்பதால் தற்போது எதுவும் செய்யமுடியாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல.

2) வா.சா.ஆ.52 ஆவணம் குறித்த விபரத்தினை வழக்குரையில் கூறியுள்ளேன். அவ்வாறு வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக குறிப்பிட்டுள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.53, 54 மற்றும் வா.சா.ஆ.55 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்ட ஆவணங்களாகும். வா.சா.ஆ.56, 57 மற்றும் 58 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் என்பதால், அவைகள் பிரதிவாதிகளை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால், சரியல்ல. மேற்படி ஆவணங்கள் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.61 ஆவணப்படியான ஆட்சேபனையில் சர்வே

எண் 95/5 ஐ குறித்த விபரங்களை கூறவில்லை. டாக்டர் பெரியசாமி வருவாய் கோட்டாட்சியர், சங்ககிரி அவர்களிடம் சொத்து சம்பந்தமாக பெயர் மாற்றம் செய்ய கொடுக்கப்பட்ட மனுவின் விபரம் எனக்கு தெரியும். டாக்டர் பெரியசாமி தாக்கல் செய்த மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்மீது தாக்கல் செய்த சீராய்வு மனுவில் நான் ஆட்சேபனை தாக்கல் செய்தேன். அந்த ஆட்சேபனை மனுவில் சர்வே எண் 95/5 சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று கூறியுள்ளது சரியானது அல்ல என்று சொன்னால், சரியல்ல. அந்த ஆட்சேபனை மனுவில் கூறியுள்ள விபரங்கள் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால், சரியல்ல.

3) வா.சா.ஆ.63 மற்றும் 64 ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால், சரியல்ல. சர்வே எண் 95/5 உள்ள நிலப்பகுதியானது தென்வடலாக செல்லும் தார் சாலைக்கும் கிழக்கே அமைந்துள்ள பகுதி என்றால், சரிதான். வாதிகளுக்கும், 2, 3, 4 பிரதிவாதிகளும் பிரச்சனையான பகுதிதான் சர்வே எண் 95/5 ஆகும். சர்வே எண் 95/5 மொத்த விஸ்தீரணம் சுமார் 46 செண்ட் என்றால், சரிதான். வழக்குரை சொத்து விபர பட்டியலில் சர்வே எண் 95/5 க்கு 23 செண்ட் என்று குறிப்பிட்டுள்ளது என்றால், சரிதான். வழக்கை நானும் 1, 2 வாதிகளும் சேர்ந்துதான் தாக்கல் செய்துள்ளோம். வழக்குரை சொத்து விபர பட்டியலில் 23 செண்ட் நிலமானது எந்த வாதிக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு கூறியுள்ளோமா என்றால், கூறியுள்ளோம். சர்வே எண் 95/5 சொத்துக்கள் ஏ அட்டவணை சொத்துகளாகவும், பி பாக சொத்துகளாகவும் பாத்தியப்பட்டது என்று கூறியுள்ளது தவறு என்று சொன்னால், சரியல்ல. மேற்படி சங்கதிகள் ஆவணங்களின் அடிப்படையில் இல்லையென்பதால், சட்டப்படி செல்லதக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல.

4) நான் சங்ககிரி வருவாய் கோட்டாட்சியர் திரு.ராம துரைமுருகன் மீது ஒரு புகாரை அளித்து அதன்படி நடைபெற்ற விசாரணையில் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 15.12.2019 ம் தேதியில் வா.சா.ஆ.70 ஆவணப்படி பிறப்பித்த செயல்முறை உத்தரவில் மேற்படி வருவாய் கோட்டாட்சியர்மீதான புகாரை நிரூபிக்க தகுந்த ஆதாரங்களை விசாரணையின்போது நான் முன்னிலைப்படுத்தவில்லை என்பதால், அந்த மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தார் என்று சொன்னால், சரிதான். என்மீதும் மற்ற 7 நபர்கள்மீதும் சேலம் நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் அளித்து அது வா.சா.ஆ.73 ஆவணப்படி முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்யப்பட்டது என்றால், சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையை ரத்து செய்ய வேண்டி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கையின்படி குற்ற வழக்கு சேலம் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகிறது என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் 23.11.2011 ம் தேதியிட்ட கிரைய ஆவணம் 4 ம் பிரதிவாதி பெயரிலான கிரைய ஆவணம் என்றால், சரிதான். 23.11.2011 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.9 ஆவணப்படி கண்டுள்ள சொத்துக்கு 4 ம் பிரதிவாதிதான் முழு உரிமையாளர் என்று சொன்னால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 03.52

ஒப்பம்/தங்கவேல்

ஒப்பம்/திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.